**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 305/2017**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.09.2025 | தகப்பனார் பெயர்: | மாரிமுத்து |
| பெயர்: | சங்கர்<br>(PW– 1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நெப்பத்தூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 60/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :12.09.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.04)**

1. தாவா சொத்து திருநகரி மணலி எஸ்டேட்டிற்கு (ரெங்கநாதன் பாடசாலை) சொந்தமானது. தாவா சொத்தானது பிரதிவாதியின் தகப்பனார் வீராசாமி பெயரில் குத்தகை பதிவு உரிமை பதிவேடு உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி ராஜேந்திரன் மற்றும் அவரது சகோதரர் சொக்கலிங்கம் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்திருக்கிறேன். அந்த பத்திரத்தை பார்த்துதான் தாவா சொத்தை நான் வாங்கினேன். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 58 செண்ட் ஆகும்.

2. ரெங்கநாதன் பாடசாலைக்கு சொந்தமான வேறு சொத்துக்கள் என் வசம் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலத்திற்கு எனது மனைவி 2ம் வாதியின் பெயரில் குத்தகை செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். அவ்வாறு குத்தகை செலுத்திய ரசீது தான் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தில் அனுபவம் உள்ளதற்கு ஆவணங்கள் ஏதும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வழக்கறிஞரிடம்

கொடுத்திருக்கிறேன்.

3. வா.சா.ஆ.1 ஆவணம் என்பது தாவா சொத்து ரெங்கநாதன் பாடசாலை பெயரில் உள்ள கணினி சிட்டா என்றால் சரிதான். நான் சொக்கலிங்கத்திடமிருந்து குத்தகை உரிமை பெற்றதற்காக குத்தகை உரிமை பதிவு ஆவணமோ, பதிவேடோ ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்திருக்கிறேன். நான் அதுபோல் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை, ஆனால் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கெல்லை என்பது கிழக்கில் வாய்க்கால், மேற்கில் ஏகாம்பரத்தின் வயல், தெற்கில் வீராசாமியின் வயல், வடக்கில் கிருஷ்ணமூர்த்தி வயல் ஆகும்.

4. வீராசாமிக்கும், சொக்கலிங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி தான் நான் சொக்கலிங்கத்திடமிருந்து தாவா சொத்தின் சாகுபடி உரிமையை பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி சாகுபடி உரிமை 1998ம் வருடம் என்னால் வாங்கப்பட்டது. 1998ம் வருடத்திலிருந்து ரெங்கநாதன் பாடசாலைக்கு வீராசாமியின் பெயரிலோ, சொக்கலிங்கம் பெயரிலோ குத்தகை செலுத்தி நான் குத்தகை ரசீது எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நான் 1998ம் வருடத்திலிருந்து சாகுபடி செய்து வருவது என்பதற்கான வட்டாட்சியரிடமிருந்து அனுபவச்சான்று பெற்று எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. தாவா புல எண்ணில் பிரதிவாதி தகப்பனார் பெயரில் எவ்வளவு நிலங்கள் குத்தகைக்கு உள்ளன என்று தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் பிரதிவாதியின் தகப்பனார் வீராசாமியும், அவரது சகோதரர் சொக்கலிங்கமும் அவர்களுக்குள் எவ்வளவு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு எதுவும் தெரியாது. அதனால் தாவா சொத்து 58 செண்ட் எப்படி சொக்கலிங்கத்திற்கு வந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய பிராதிலும், முதன்மை விசாரணையிலும் சொக்கலிங்கத்திற்கும்

வீராசாமிக்கும் இடையில் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டது என கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

6. எதன் அடிப்படையில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி என் மீது வழக்கிட்டுள்ளார், அதனால் நானும் பிரதிவாதி பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் OS. 150/2017 என்ற எண்ணில் அசல் வழக்கு தொடர்ந்து அதில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு எதிராக பிரதிவாதியால் பெறப்பட்டது என்றால், என் பெயரில் வழக்கு கிடையாது, என் மாமனார் ஜெகநாதன் பெயரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனது மாமனார் ஜெகநாதன் பெயரில் ஏற்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் எனக்கு ஏதேனும் பாதிப்பு வந்துவிடுமோ என்று இந்த வழக்கின் பிரதிவாதி மீது நான் தவறாக வழக்கிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் 1998ம் வருடத்திலிருந்து சாகுபடி உரிமை பெற்று சாகுபடி செய்து வருவதற்கான ஆதாரங்கள் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை,அதனால் தான் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்புடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 உண்மை என்றால் இன்னாருக்கு இன்னார் செலுத்தியது என்ற விபரம் அதில் இருந்திருக்கும், நேரடியாக எனது மனைவி 2ம் வாதி பெயரில் வந்திருக்காது என்றால் சரியல்ல.

8. தாவா சொத்து சம்மந்தமாக எனது பெயரிலோ அல்லது எனது மனைவி பெயரிலோ உள்ள வா.சா.ஆ.2 ஆவணம் ரெங்கநாதன் அறக்கட்டளைக்கு சொந்தமான இதர சொத்துக்களை பொறுத்து பெறப்பட்டது என்றாலும் தாவா சொத்தை பொறுத்து இல்லை என்றாலும் சரியல்ல. நான் எனது வழக்கிற்கு ஆதராவான ஆவணங்களை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைநிற்கத் தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களை தவிர

வேறு எந்த ஆவணமும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்கிற்கு ஆதரவாக வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத காரணத்தால் நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.33)**